செ.வெ.எண்: 288 நாள்: 01.05.2020

**தஞ்சாவூர் மாநகராட்சி தூய்மைப் பணியாளர்கள் மற்றும் குடிநீர் பிரிவு பணியாளர்களுக்கான சிறப்பு மருத்துவ முகாமினை தஞ்சாவூர் மண்டல கொரோனா தடுப்புக் குழு கண்காணிப்பு அலுவலர் திரு.எம்.எஸ்.சண்முகம் இஆப., அவர்கள் தொடங்கி வைத்தார்**

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் தூய அந்தோணியார் மேல்நிலைப்பள்ளியில் தஞ்சாவூர் மாநகராட்சி தூய்மைப் பணியாளர்கள் மற்றும் குடிநீர் பிரிவு பணியாளர்களுக்கான சிறப்பு மருத்துவ முகாமினை தஞ்சாவூர் மண்டல மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இஆப., அவர்கள் முன்னிலையில், மண்டல கொரோனா தடுப்புக் குழு கண்காணிப்பு அலுவலர் திரு.எம்.எஸ்.சண்முகம் இஆப., அவர்கள் இன்று(01.05.2020) தொடங்கி வைத்தார்.

தஞ்சாவூர் மாநகராட்சிக்குட்பட்ட 51 வார்டுகளில் பொது சுகாதார பணியின் கீழ் உள்ள 14 கோட்டங்களில் 620 தூய்மை பணியாளர்களும், பொறியியல் பணி குடிநீர் பிரிவின் கீழ் 130 பணியாளர்களும் பணியாற்றி வருகின்றனர். கொரோனா முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்படுவதற்கு 45 நாட்களுக்கு முன்பிருந்தே இப்பணியாளர்கள் தஞ்சாவூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சுகாதாரப் பணி, குடிநீர் வழங்கும் பணி, கிருமிநாசினி தெளிக்கும் பணி ஆகிய பணிகளில் முழுவீச்சில் ஈடுபட்டு வருகின்றனர். இப்பணியாளர்களுக்கு தஞ்சாவூர் மாநகராட்சி சார்பில் காலணி, கையுறை, முகக்கவசம், கைகளை சுத்தம் செய்வதற்கு சோப்பு மற்றும் கிருமிநாசினி, காலை மற்றும் நண்பகல் உணவு ஆகியவை வழங்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, கொரோனா நோய்த்தடுப்பு பணியில் ஈடுபட்டுள்ள பணியாளர்களுக்கு சிறப்பு மருத்துவ முகாம் நடத்தப்பட்டு தஞ்சாவூர் மாநகராட்சியில் பணியாற்றும் தூய்மைப் பணியாளர்கள் மற்றும் குடிநீர் பிரிவு பணியாளர்களுக்கு தஞ்சாவூர் தூய அந்தோணியார் மேல்நிலைப்பள்ளியில் தஞ்சாவூர் மண்டல கொரோனா தடுப்புக்குழு கண்காணிப்பு அலுவலர் திரு.எம்.எஸ்.சண்முகம் இஆப., அவர்களால் சிறப்பு மருத்துவ முகாம் தொடங்கி வைக்கப்பட்டது.

மருத்துவ முகாமில் இந்திய மருத்துவக் கழகத்தின் சார்பில் 40 மருத்துவர்களும், மாவட்ட மருத்துவ பணிகள் இணை இயக்குனர், மாவட்ட சுகாதாரப்பணிகள் துணை இயக்குனர், மாநகராட்சி பொது சுகாதாரத்துறை, தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மருத்துவர்கள் மற்றும் தனியார் மருத்துவமனையில் சார்பில் மருத்துவர்கள் என பல்வேறு சிறப்பு மருத்துவர்கள் மற்றும் மருத்துவம் சார்ந்த பணியாளர்கள் சுமார் இருநூறு பேர் கலந்துகொண்டு 30 தனி அறைகளில் மாநகராட்சி பணியாளர்கள் 750 பேருக்கு மருத்துவ பரிசோதனை மற்றும் ஆலோசனைகளை வழங்கினார்கள்.

இம்முகாமில் 30 தனி அறைகள் அமைக்கப்பட்டு, தஞ்சாவூர் மாநகராட்சியில் பணியாற்றும் தூய்மைப் பணியாளர்கள் மற்றும் குடிநீர் பிரிவு பணியாளர்கள் 750 பேருக்கு உடல் எடை, உடல் வெப்பநிலை, ரத்த அழுத்தம், சர்க்கரை அளவு ஆகிய மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டு, மருத்துவர்களால் ஆலோசனைகள் வழங்கப்பட்டது. நோய்த் தொற்றுக்கான அறிகுறி கண்டறியப்பட்ட பணியாளர்களுக்கு மருத்துவர்களால்  மருந்துகள் இலவசமாக வழங்கப்பட்டது. மேலும், அனைத்து பணியாளர்களுக்கும் இரும்பு சத்து மாத்திரைகள், வைட்டமின் சி மாத்திரைகள், சிங் மாத்திரைகள், தடுப்பூசி,  200 மில்லி லிட்டர் நோய் எதிர்ப்பு சக்தி பானம், பிஸ்கட் பாக்கெட், வாழைப்பழம், கடலை மிட்டாய், சாத்துக்குடி ஆகியவை இலவசமாக வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையர் திருமதி. ஜானகி ரவீந்திரன், தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர்.குமுதா லிங்கராஜ், மருத்துவப் பணிகள் இணை இயக்குனர் டாக்டர் ராமு, சுகாதாரத்துறை துணை இயக்குனர் டாக்டர் ரவீந்திரன், தஞ்சாவூர் வருவாய் கோட்ட அலுவலர் திருமதி.வேலுமணி, இந்திய மருத்துவ கழக தஞ்சாவூர் கிளைத் தலைவர் டாக்டர் மாரிமுத்து, தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி முன்னாள் முதல்வர்கள் டாக்டர் சிங்காரவேல், டாக்டர் இளங்கோவன், தஞ்சாவூர் மாநகராட்சி செயற்பொறியாளர் திரு.ராஜகுமாரன், உதவி செயற்பொறியாளர் திரு.ராஜசேகரன், கண்காணிப்பாளர் திரு.கிளமெண்ட் அந்தோணிராஜ், மாநகர் நல அலுவலர் திரு.நமச்சிவாயம், தஞ்சாவூர் வட்டாட்சியர் திரு.வெங்கடேஸ்வரன், தூய அந்தோணியார் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் திரு.சவரிநாயகம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

செய்தி வெளியீடு : செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.